| STC.No.310/2024 | PW1: திரு.சந்தோஷ் | 08.04.2026 |
|---|---|---|

(எதிரி ஆஜரில் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317/ 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. எங்களுடைய தலைமை அலுவலகம் எங்குள்ளது என்றால் சென்னையில் உள்ளது. நீலகிரி மாவட்டத்தில் சீட்டு நடத்துவதற்கு நாங்கள் பதிவு செய்துள்ளோமா என்றால் இல்லை. சென்னையில் உரிமம் பெற்றதற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. எங்களது நிறுவனத்தை இன்கார்ப்பரேஷன் செய்துள்ளோமா என்றால் பதிவு செய்துள்ளோம். அதற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி எப்போது எங்களது நிறுவனத்தில் சீட்டில் சேர்ந்தார் என்றால் 23.11.2019 ம் தேதியன்று சீட்டில் சேர்ந்தார்.

3. அந்த சீட்டின் எண் ஞாபகமுள்ளதா என்றால் G2H/0936/K06/03 ஆகும். அந்த சமயத்தில் எங்களது நிறுவனத்திற்காக வழக்கு நடத்துவதற்கும், சாட்சியம் அளிப்பதற்கும் எனக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்ததா என்றால் அளிக்கப்பட்டிருந்தது. அந்த சீட்டின் தொகை எவ்வளவு என்றால் அது ஐந்து இலட்சத்திற்கான சீட்டு ஆகும்.

G.SARAVANAKUMAR

Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.04.08 19:32:05 +0530

4. எத்தனை மாதத்திற்குண்டான சீட்டை எடுத்தார் என்றால் 20 மாதங்கள் ஆகும். அந்த சீட்டைத் தொடங்கும் போது இரண்டு பிணையதாரர்கள் வாங்கினோம் என்றால் சீட்டு தொடங்கும் போது வாங்கவில்லை. எப்போது பிணையதாரர் வாங்குவோம் என்றால் சீட்டுத் தொகை கொடுக்கும் போது பிணையதாரர் வாங்குவோம். பிணையதாரர்களிடமிருந்து நிரப்பப்படாத காசோலையை வாங்குவோமா என்றால் இல்லை.

5. சீட்டை எடுத்த பிறகு சந்தாதாரர் பணம் செலுத்தவில்லை என்றால் அவருக்கு எத்தனை சதவீதம் வட்டி வசூலிப்போம் என்றால் 18 சதவீதம் வட்டி வசூலிப்போம். சீட்டை தொடங்கும் போது நாங்களும், எதிரியும் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்றால் சீட்டு ஒப்பந்தம் உள்ளது. அந்த ஒப்பந்தம் தொடர்பான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை.

6. எதிரியின் மகன் சனோஜ் மேத்யூ என்பவர் எங்கள் நிறுவனத்தில் ஒரு சீட்டு போட்டிருந்தாரா என்றால் போட்டிருந்தார். ஆனால் தொடரவில்லை. சனோஜ் மேத்யூ என்பவர் தான் எங்கள் நிறுவனத்தில் மாதத் தவணைகளை செலுத்தினார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகும் சனோஜ் மேத்யூ எங்கள் நிறுவனத்தில் பணம் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான்.

G.SARAVANAKUMAR

Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.04.08 19:32:10 +0530

7. சுரேந்திரன் எனது மூத்த அதிகாரியாவார். எப்போது எங்களது நிறுவனத்தில் காசோலையை கொடுத்தார்கள் என்றால் 18.10.2022 ம் தேதியன்று கொடுத்தார்கள். அந்த காசோலையின் எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. காசோலையில் கையொப்பம் செய்யப்பட்டுள்ள மையும், பூர்த்தி செய்யப்பட்டுள்ள மையும் வெவ்வேறானது என்றால் சரியல்ல.

8. எதிரி காசோலை கொடுத்த இரண்டு மாதங்களுக்கு பின்பு தான் அதை வசூலுக்கு போட்டோம் என்றால் சரிதான். காசோலையை வசூலுக்கு போடுவதற்கு முன்பு எதிரிக்கு தகவல் கொடுத்தோமா என்றால் எதிரியை பார்த்து பேசினோம். எதிரி எங்கள் நிறுவனத்தில் சீட்டில் சேரவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து பிணையமாக காசோலை பெற்றோம் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கின் விவரங்கள் தெரியவில்லை என்றாலும், ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் இல்லை.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.04.08 19:32:14 +0530

**PRINCIPAL DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, GUDALUR.**